போர்வாள்

--- திராவிடர் வார வெளியீடு ---

ஆசிரியர்கள்: காஞ்சீ.மணிமொழியார், மா.இளஞ்செழியன்

திருவள்ளுவர் ஆண்டு 1979 ஐப்பசி 28
சென்னை, 13—11—48
வீச்சு 12

1938-ல். காங்கிரஸ்வாலா 1948-ல



காங்கிரஸ்காரர்கள் விசித்திரப் பிறவிகள் சார் என்று சொல்லிக்கொண்டே நம் அலுவலகத்தில் நுழைந்தார் ஓவியர் ஏ. கே. சாமி. ஏனையா அப்படிச் சொல்கிறீர் என்று கேட்டோம், இப்படத்தைக் காட்டினார் பதிலாக! படத்தைப் பார்த்ததும் நண்பர் சாமி கூறியது மெய்தான் என்பது நமக்கும் நன்றாகப் புலப்பட்டது. நாட்டுக்குச் சுதந்தரம் வருமுன்னால் சமஸ்தானாதிபதிகளை அழிந்துபோக வேண்டிய அவமானச் சின்னங்கள் என்று தூற்றியவர்கள், இன்று, "மன்னர்கள் ஆட்சி மறைய வேண்டும் என்று பேசுவது கூடாது, அவர்கள் சிறந்த தேசபக்தர்கள்" என்று அவர்களுக்குப் பூமாலையும் புகழ்மாலையும் சூட்டுகிறார்கள்; இந்தியாவில் 500 ரூபாவுக்கு மேல் மாத சம்பளம் யாருமே வாங்கக் கூடாது என்று பேசியவர்கள் இன்று கவர்னர் ஜெனரலுக்கு மாத சம்பளம் 21000, வெளிநாட்டுத் தூதுவர்கட்கு மாதம் 5000 6000, 10,000, ஒவ்வொருவருக்கும் ஆறு கார், ஏழுகார் அதில் மூன்று "ரோல்ஸ் ராய்ஸ்" என்ற விதத்தில் "டாம்பிக வாழ்க்கை"யில் ஆநந்தமாக வாழ்கிறார்கள். "அடக்கு முறை ஒழிக! போலீஸ் குண்டாந்தடி ஆட்சி ஒழிக! சிறைச்சாலைகள் தவிடுபொடியாக!" என்று அண்டம் முட்டக் கூவியவர்கள் இன்று சிறைச்சாலையையும் போலீசையுமே தங்களின் ஆத்மாவும் அந்தராத்மாவுமாக கொண்டுவிட்டார்கள்!·1938-ல் அப்படி! 1948-ல் இப்படி! சுதந்தரம் வருமுன் விடுதலைக் கீதம்! சுதந்தரம் வந்தபின் வெலிங்டன் தர்பார்! இப்படிப் பட்டவர்களை விசித்திரப் பிறவிகள் என்று ஓவியர் சாமி கூறியதைத் தப்பு என்று யார் கூறமுடியும்?

விலை $1\frac{1}{2}$ அணா

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருடைய உள்ளத்தில் திராவிடர் கழகம் நிழலாட வில்லை என்று யார் கூறமுடியும்?

ஹிந்து நிருபர், இந்த உண்மையை மிக அழகாக எடுத்துச் சொல்லிவிட்டார் அவரை அறியாமல்! ஹிந்து நிருபர் எழுதி இருக்கிருர்: Mr. T. T. K. drew the attention of the house of the Separatist Tendencies gripping the imagination of the inifluential section of the Population in South India. நன்ருகக் கவனியுங்கள "ஹிந்து" நிருபர் வாசகத்தை:—**தென்இந்திய மக்கள் சமுதாயத்தில் செல்வாக்குள்ள பகுதியினரின் உள்ளத்தில் வேர் ஊன்றிப் போயிருக்கும் பிரிவினை உணர்ச்சியை, டி. டி. கே சபையாரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.**

நமது பிரிவினை முழக்கத்தை வெறும் காட்டுக் கூச்சல் என்று எள்ளி நகையாடும் பக்தவச்சலங்களும் ஓமந்தூர் இராமசாமிகளும் இந்த வாசகத்தை நன்ருக நினைவில் இருத்திக்கொள்ளட்டும் — நமது முழக்கம் மக்கட் சமுதாயத்தில் செல்வாக்குள்ள பகுதியினரின் உள்ளத்தில் வேர் ஊன்றிப் போய் இருக்கிறது. கூறுபவர் டி. டி. கே! அவர் திராவிடர் கழகத் தலைவர் அல்ல!

"ஹிந்து" நிருபர் மேலும் கூறுகிருர்: **"தென்னாட்டு மக்களின் இலட்சியங்களையும் கோரிக்கைகளையும் எதிர்த்து அவசரப்பட்டோ அல்லது நிலைமையை உணர்ந்து அனுதாபம் காட்டாமலோ எடுக்கப்படும் நடவடிக்கைகள் விபரீத விளைவுகளையே தரும் என்றும் டி. டி. கே. எச்சரிக்கை செய்தார்."**

ஆம்! அவர் டில்லியில் எச்சரிக்கை செய்திருக்கிருர் நமது இலட்சிய முழக்கத்தை அடக்க நினைப்பது விபரீத விளைவுகளைத் தரும் என்று! ஆனல் சென்னை முதலமைச்சர் இதை உணர மறுக்கிருர்! மேலும் மேலும் அடக்குமுறை பாணங்களை நம்மீது ஏவத் துடிக்கிருர்! இந்தியை இவர்கள் ஏன் எதிர்க்கிருர்கள் என்று தனக்குப் புரியவே இல்லையே என்று நாடகம் நடிக்கிருர்!

டில்லியிலே சென்னை! சென்னையிலே டில்லி! ஹிந்து ஏடு தந்துள்ள இந்த இரு செய்திகளையும் நமது முதலமைச்சர்தம் கவனத்திற்குக் கொண்டுவருகிருேம். இந்த இரு செய்திகளும் கற்பிக்கும் ஒரு பாடத்தை—திராவிடநாடு திராவிடருக்கே என்ற பாடத்தை—அவர் ஆர அமர இருந்து கற்றுத் தெளியட்டும். பிறகு கூறட்டும் நமது இலட்சிய கீதம் தமக்குப் புரிகிறதா இல்லையா என்னும் சேதியினை! இப்போது வேண்டாம்!

திராவிடர் இயக்க நூல்கள்

பெரியார்

புதியதோர் உலகு செய்வோம்	0	6
சித்திரபுத்திரன் எழுதுகிருர்	0	6

இளஞ்செழியன்

தமிழன் தொடுத்த போர்	1	12
திராவிடஸ்தான் வேண்டாமா	0	8
ஈரோட்டுப் பாதை	0	6

ந. சி. கந்தையா

திராவிடம் என்ருல் என்ன	0	6
ஆரியத்தால் விளைந்த கேடு	0	6
பெண்கள் போராட்டம்	0	6
சிந்துவெளித் தமிழர்	0	8
ஆரியர் தமிழர் கலப்பு	0	8
மரணத்தின்பின்	0	8
உலக அறிவியல் நூல்	0	8
மூச் சங்கம்	0	8
பாம்பு வணக்கம்	0	4
சங்க காலத் தமிழ்நாடு	0	10
அகத்தியர் யார்	1	0
தமிழர் சரித்திரம்	3	0
பழந் தமிழர்	1	12
மனிதன்எப்படிதோன்றினன்	0	8
ஆதி மனிதன்	0	8
திருவள்ளுவர்	0	8
பெண்களும் சமூகமும்	0	8
திருமணம்	0	12
நமது தாய்மொழி	0	8
நூலகங்கள்	0	8
மறைந்த நாகரிகம்	1	4
தமிழர் யார்	0	8
பெண்கள் உலகம்	0	12
ஆரிய வேதங்கள்	0	10
திராவிடர் நாகரிகம்	0	10
தமிழாராய்ச்சி	0	6
தமிழ் விளக்கம்	0	6
தமிழர் சமயம் எது	0	8

பாரதிதாசன் நூல்கள்

காதல் நினைவுகள்	0	12
தமிழ் இயக்கம்	1	0
நல்ல தீர்ப்பு	0	10
இசையமுது	0	10
அழகின் சிரிப்பு	1	0
பாண்டியன் பரிசு	3	8
பாரதிதாசன் கவிதை	3	8
எதிர்பாரா முத்தம்	1	4
குடும்ப விளக்கு I	0	6
குடும்ப விளக்கு II	0	10
அமைதி	0	8

தளபதி C. N. A.

பணத்தோட்டம்	1	0
ஜமீன் இனும் ஒழிப்பு	1	0
உலகப் பெரியார்	1	0
கற்பனைச் சித்திரம்	1	0
சிறு கதைகள்	1	0
நிலையும் நினைப்பும்	0	12
ரேடியோவில் அண்ணு	0	12
குமரிக் கோட்டம்	1	0
நாடும் ஏடும்	0	6
நல்ல தீர்ப்பு	0	4
ஏ தாழ்ந்த தமிழகமே	0	8
திராவிடர் நிலை	0	8
விடுதலைப் போர்	1	0
கம்பரசம்	1	8
ஆரியமாயை	1	0
வர்ணுஸ்ரமம்	0	12
தமிழரின் மறுமலர்ச்சி	0	8
மேதினம்	0	5
ரோமாபுரி ராணிகள்	2	4

மற்ற நூல்கள்

வீராயி (கவிதை)	1	0
சிறந்த பேச்சாளர்கள்	1	0
கி. பி. 2000	1	12

பகுத்தறிவுப் பாசறை, 147, பவழக்காரத் தெரு, சென்னை.

இரண்டு மந்திரிகள்!

கிராமங்கள்தான் இந்திய நாட்டின் முதுகெலும்பு என்கிறார் சர்தார் படேல்!

கிராமங்கள்தான் இந்தியாவின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்கிறார் டாக்டர் அம்பேத்கார்-

கிராமங்கள் இல்லையேல் இந்தியா இல்லை என்கிறார் சர்தார் படேல்!

கிராமங்கள் என்றால் என்ன? மூடநம்பிக்கையின் குகைகள் என்கிறார் டாக்டர் அம்பேத்கார்.

"காந்திஜீயின் வாழ்க்கை கிராமங்களிலேயே இரண்டறக் கலந்து நின்றது, காந்திஜி கடைசிவரை ஒரு கிராமவாசியாகவே இருந்தார், இராமராஜ்யம் ஏற்படுத்துவதே அவர் கனவாக இருந்தது—வாழ்க கிராமங்கள்!"—இது சர்தாரின் வீர கர்ஜனை!

"குறுகிய நோக்கம், குருட்டுப் பிடிவாதம், மூடநம்பிக்கை, முட்டாள்தனம் இவற்றின் கூட்டுத் தொகைதான் கிராமங்கள்! இந்தக் கிராமங்களை எண்ணி எவர்தான் பெருமைப்பட முடியும்? எப்படித்தான் பெருமையடைதல் கூடும்?"—இது டாக்டரின் "நுணுக்கமான" ஆராய்ச்சிக் கேள்வி!

"காந்திஜீ சொன்னார் இந்தியா தலைநிமிர வேண்டுமானால் கிராமங்கள் தலைநிமிர்ந்தால்தான் முடியும் என்று!"—சர்தார் படேல் பேசுகிறார்!

"வம்சத்திற்குப் பிறகு வம்சமாக எத்தனையோ பரம்பரைகள் இந்தியாவை ஆண்டன! புரட்சிகள் அடுத்தடுத்துத் தோன்றின. ஹிந்து, பாதான், மொகல், மராட்டா, சீக்கியர் ஆங்கிலேயர் என்று ஒருவர்பின் ஒருவராக இந்தியாவுக்கு எஜமானர்கள் வந்து கொண்டிருந்தனர். ஆனால் இவ்வளவுக்கும் இந்த கிராமங்கள் சுண்டு விரலையும் அசைக்காமல் சும்மாதான் கிடந்தன. பகைவர் தம் சேனை கிராமத்தின் வழியே போகும். உடனே கிராமவாசிகள் தங்கள் ஆடுமாடுகளை ஒன்று சேர்த்துக்கொண்டு கிராமச் சுவர்களுக்குள் பதுங்கிவிடுவர். சேனை எதிர்ப்பின்றி வெற்றியுடன் செல்லும்! இதுதானய்யா இந்திய கிராமங்கள் என்று எழுதியுள்ளார் மெட்காப் என்ற மேனாட்டறிஞர்"—டாக்டர் அம்பேத்கார் பேசுகிறார்!

சர்தாரும் டாக்டரும் மந்திரிகள்! வெவ்வேறு சர்க்காரில் அல்ல! ஒரே சர்க்காரில்! இந்திய சர்க்காரில்! என்றாலும் இப்படி "குஸ்தி" போடுகிறார்கள்!

4-11-48 காலை சர்தார் படேல்—இந்திய சர்க்காரின் உள்நாட்டு மந்திரி—வார்தாவில் பேசுகையில் கிராமங்கள்தான் தேசத்தின் உயிர் நாடி என்று கூறுகிறார்!

5-11-48 காலை டாக்டர் அம்பெத்கார்—அதே சர்க்காரின் சட்ட மந்திரி—டில்லி அரசியல் ஆக்க மன்றத்தில் பேசுகையில் கிராமங்களாலேதான் இந்தியா அடிமைப் பட்டது என்று கார சாரமாகப் பேசுகிறார்!

ஒரு மந்திரி கிராமங்களின் பகைவர்!

ஒரு மந்திரி கிராமங்களின் நண்பர்!

ஒரு மந்திரி கிராமங்களின் வக்கீல்!

ஒரு மந்திரி கிராமங்களின் எதிர் வக்கீல்!

ஒருவர் "வாழ்க கிராமீயம்!"

ஒருவர் "வீழ்க கிராமீயம்!"

இவர், கிராமத்தாலேதான் நமக்கு இன்பம் என்கிறார்!

அவர், கிராமத்தாலேதான் நமக்குத் துன்பம் என்கிறார்!

இவரும் அவரும் ஒரே சர்க்காரில் ஏக காலத்தில் மந்திரிகள்! எவ்வளவு ஒற்றுமை இரு மந்திரிகளுக்கிடையே!

இவர்கள் இருவரையும் பார்க்கிறபோது, நம்முடைய சென்னை மந்திரிகள் ஆயிரம் மடங்கு "தேவலை" போல் இருக்கிறதே. உண்மையில் இந்தியைக் கட்டாய பாடமாக வைத்து விட்டாலும் எல்லாரும் ஒருவர்போல கட்டாய பாடமாக வைக்கவே இல்லை என்று சாதிக்கிறார்களே! மறந்து கூட ஒருவர்கூட கட்டாயந்தான் என்று ஒரு முறைகூட கூறவில்லையே! இவர்கள் அல்லவா மந்திரிகள்!

டில்லியே! சென்னையைப் பார்! இந்திய சர்க்காரே! சென்னை சர்க்காரைப் பார்! பாடம் பெறு!!

புதியதோர் உலகு செய்வோம்!

★

திராவிடர் கழக இலட்சியங்களைச் சிறந்த முறையில் விளக்கும் **பெரியார்** அவர்களின் பேருரை. ஒவ்வொரு திராவிடரும் அவசியம் படிக்கவேண்டிய அருமையான சொற்பொழிவு.

விலை அணா 6.
தபாலில் 0—7—0

★

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு,
சென்னை 1.

அதிசயம்! ஆனால் உண்மை!

1. "பாரததேவி" "சூனாமானா" இதழ் ஆகிறது!

மூர்ச்சையடைந்து விடாதீர்கள் தலைப்பைப் பார்த்ததும்! பார்ப்பன ஏடு "பாரத தேவி"யா பகுத்தறிவுத் தெளிவு பெற்று சுயமரியாதை இதழாக மாறப்போகிறது ஒருக்காலுமில்லை, இந்த "போர்வாள்" ஆசிரியருக்கு கொஞ்சம் கீழ்ப்பாக்கம் வாசனை போலும் அதனால் தான் இப்படி யெல்லாம் எழுதுகிறார் என்று எண்ணிவிடாதீர்கள்! உண்மையாகவே கூறுகிறோம் பாரத தேவி "சூனாமானா" ஏடு ஆகிறது!

ஓஹோ! ஏனையா ஆசிரியரே ஏன் இப்படிக் கயிறு திரிக்கிறீர்? ஆதாரம் உண்டா இந்த அர்த்த மற்ற துணிவுரைக்கு என்பீர்கள்!

உண்டு! தாராளமாக உண்டு! இதோ, ஆதாரம்—அசைக்க முடியாத ஆதாரம்!

தர்மன், துரியோதனனோடு சொக்கட்டான் ஆடியபோது, தன் சொத்தை செல்வத்தை நாட்டை நகரத்தை ஆடை அணிகலன்களை கடைசியில் தன்னையும் தன் தம்பிமார்களையும்கூட சூதாட்டத்தில் பந்தயமாக வைத்துத் தோற்றுவிட்ட பிறகு, தங்கள் மனைவி பாஞ்சாலியையும் [ஐவர்க்கும் பத்தினி! அழியாத கற்பரசி!] பந்தயத்தில் வைத்துத் தோற்றானே! இதை நாம் எவ்வளவு கேலி செய்திருக்கிறோம், நாம் எவ்வளவு கேலி செய்திருக்கிறோம் என்பது இருக்கட்டும் ஒருபுறம், நம்மைத் தவிர இதைக் கேலி செய்தவர்கள் வேறு யாராவது உண்டா, இந்த மடமைச் செயலை நாம் மக்கள் மன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தி, இந்த தர்மனா தர்மத்திற்குத் தலைவன் என்று எள்ளி நகையாடியபோது, ஐயய்யோ மதவாதிகளின் மனம் புண்படுகிறதே என்று அண்டம் அதிரக் கூச்சலிட்ட அக்கிரகார அதிசய மனிதர்கள் எத்தனை எத்தனை ஆயிரம்!

இந்நாள், "பாரத தேவி" தர்மனை, இதேபோல, இன்னும் கூட காரமாக, கிண்டல் செய்யுமானால் அது சூனாமானா ஆகிறது என்றுதானே அர்த்தம்?

ஆமாம், அதற்கென்ன ஐயம் என்பீர்கள்! கூடவே கூறுவீர்கள், பாரத தேவியா, தர்ம மகாராஜாவையா, இந்து மதத்தின் ஐந்தாம் வேதமாகிய மகா பாரதத்தின் திவ்விய புருஷரையா, கிண்டலா, ஒருபோதும் இருக்காது என்று தலையை வேக வேகமாக ஆட்டுவீர்கள்! ஆனால் உண்மையாகத்தான், பாரத தேவிதான், தர்மபுத்திரரைத் தான், கிண்டல்தான், செய்துதான் இருக்கிறது.

இந்த ஆண்டு தீபாவளியன்று இரவு சூதாட்டம் ஆடித் தன்னிடமிருந்த பணத்தை யெல்லாம் தோற்ற ஒரு முஸ்லிம் கடைசியில் தனது மனைவியையும் பந்தயத்தில் பணயமாக வைத்துத் தோற்றானாம், வட இந்தியாவில், பாட்னாவில்! இந்தச் செய்திக்கு சாதாரணமாக என்ன தலைப்பு கொடுக்கப்படும்? முஸ்லிம் தோழரின் முட்டாள் தனம் என்றோ பாட்னா அருகில் புத்திகெட்ட சம்பவம் என்றோ பாட்னா முஸ்லிமின் விபரீதபுத்தி என்றோதான் சாதாரணமாக தலைப்பு தரப்படும். ஆனால் "பாரத தேவி", இந்தச் செய்திக்குத் தந்துள்ள தலைப்பு என்ன தெரியுமோ?

பாட்னாவில் ஒரு கலியுக தர்மன்! மனைவியை சூதாட்டத்தில் வைத்துத் தோற்ற ஓர் மதிகெட்ட மடையன் தர்மன் என்று அழைக்கப்படுகிறான் பாரத தேவியால்! எவ்வளவு சூனாமானா வேகம் இருக்க வேண்டும் இந்த ஏட்டுக்கு இந்த துணிச்சல் ஏற்படவேண்டுமானால்! திருடனை திருமங்கை ஆழ்வார் என்று கூறுவதைப் போல, தன் மனைவியைப் பிறர்பால் அனுப்பும் தூர்த்தனை இக்கால இயற்பகை நாயனார் என்று எழுதுவதைப் போல, பிறர் சொத்தை தன் விருப்பம்போல் அள்ளி இறைக்கும் அயோக்கிய நடத்தை கொண்டவனை மற்றுமோர் மாணிக்க வாசகர் என்று கூறுவதைப் போல கூட்டத்தில் கல் எறியும் காலிகளின் செயலை சாக்கிய நாயனார்களின் தோற்றம் என்று தலைப்பளித்துச் செய்தி தீட்டுவது போல, மனைவியைச் சூதாட்டப் பந்தயப் பொருள் ஆக்கியவனை கலியுக தர்மன் என்று முந்திரிக்கொட்டை எழுத்திலே பொறித்திருக்கிறது "பாரததேவி"!

இந்துமத புராண இதிகாசங்களின் ஆபாசங்களை எள்ளி நகையாடுவதற்கு இதைவிட அற்புதமான முறை வேறென்ன இருக்க முடியும்?

இந்துமத ஊழல்களை அம்பலப் படுத்துவது சூனாமானா பிரசாரம் அல்ல என்றால் வேறு எது சூனாமானா பிரசாரம்?

நம்மை "குடைத்துணி ரசாக்கர்கள்" என்று மனந்துணிந்து எழுதும் அளவுக்கு மமதை படைத்த ஓர் ஆரிய ஏட்டின் உள்ளம் தன்னை அறியாமலே நம் பிரசாரத்தில் இவ்வளவு தூரம் லயித்துவிட்டது என்றால் சுயமரியாதை இயக்கம் வெற்றி பெற்றுவிட்டது என்பதற்கு இன்னும் என்ன அத்தாட்சி தேவை?

2. இந்தி எதிர்ப்புத் தத்துவத்தை அவினாசியார் ஆதரிக்கிறார்!

"நம்முடைய கல்விக்கூடங்களில் மற்றொரு நாட்டுக் கலாசாரம் படையெடுப்பதை நாம் எதிர்த்து நிற்காமல் இருக்க முடியாது."

இப்போது நாம் நடாத்தி வருகின்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் அடிப்படைத் தத்துவம் இது என்பதை நம் தலைவர் பெரியார் அவர்களும் தளபதி அண்ணா அவர்களும் எடுத்துச் சொல்லாத மேடை கிடையாது. வடநாட்டு இந்தி இங்கே நுழைகிறது என்றால் வடநாட்டு கலாச்சாரம் நம் நாட்டின்மீது படை எடுக்கிறது என்று தான்பொருள். ஆகவேதான் இந்தி நுழைவை நாம் எதிர்க்கிறோம்—அறப் போர் தொடுக்கிறோம் என்று நாம் "விஷய விளக்கம்" ஆற்றாத நேரமும் கிடையாது. இப்போது அமைச்சர் அவினாசியார் இதே "விஷய விளக்கம்" ஆற்றவும் இதே தத்துவத்தை விளக்கிக் கூறவும முன்வந்துவிட்டார்! இந்தி எதிர்ப்புத் தத்துவத்தை மங்களூர் செயின்ட் ஆன்ஸ் கிறித்துவக் கல்லூரியில் அன்பர் அவினாசியார் நன்றாக விளக்கிப் பேசி இருக்கிறார்—அந்த விரிவுரையின் ஒரு துண்டுதான் நாம் முதலில் குறிப்பிட்டுள்ள வாசகம்.

"நம்முடைய கல்விக் கூடங்களில் மற்றொரு நாட்டுக் கலாசாரம் படையெடுப்பதை நாம் எதிர்த்து நிற்காமல் இருக்க முடியாது"—என்ன அரு

(11-ம் பக்கம் பார்க்க)

பண்டித நேரு பேசுகிறார்!

தமிழகத்தில் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக நுழைக்கும் நம் ஆளவந்தார்களின் செயல் அர்த்தமற்றது, தேவையற்றது, விபரீதமானது, வீண் எரிச்சலை மக்கள் உள்ளத்திலே எழுப்பக் கூடியது, என்றெல்லாம் நாம் கூறிவருகிறோம்—பல நாட்களாக; இந்த உண்மையை ஊராள்வோரின் உறுமலுக்கும் உளறலுக்கும்கூட அஞ்சாமல் நாம் கூறி வருகிறோம், அதற்கு நாம் பெற்ற பரிசு பைத்தியக்காரர்கள் என்ற பட்டம்! ஆனால் இதோ 8-11-48 திங்களன்று, பண்டித ஜவகர்லால் நேரு, டில்லி அரசியல் ஆக்க மன்றத்தில், இதே வார்த்தைகளைக் கூறி இருக்கிறார், இதற்கென்ன கூறுகிறார்கள் இந்த ஆளவந்தார்கள் என்று கேட்கிறோம்.

அவரும் பைத்தியக்காரர் தானா, அவர்கூட அர்த்தமற்ற காட்டுக் கூச்சல் போடுபவர் தானா, அவர் பேசியிருப்பதும் கூட எதையாவது சொல்லி சர்க்காரை எதிர்க்கவேண்டும் என்ற எண்ணத்தாலே கூறப்பட்ட வார்த்தைகள் தானா? ஆம் என்று சொன்னாலும் சொல்லி விடுவார்கள் "நம்ம" சென்னை மந்திரிகள்! சாமானியமானவர்களா அவர்கள்! "பாரத தேவி' பதட்டத்தோடு கூறுவதுபோல் நம்மைப்போன்ற சாதாரண ஜனங்களால புரிந்துகொள்ள முடியாதபடியான சொல்லும் செயலும் படைத்த "மகாமேதாவிகள்!"

விருப்பமில்லாத மக்களுக்கிடையே இந்தியைக் கட்டாயமாக்குவது விபரீத விளைவுகளைத்தரும் என்பதை பண்டித நேரு அழுத்தந் திருத்தமாக அறிவித்திருக்கிறார் டில்லி அரசியல் ஆக்க மன்றத்தில்! "மொழி தனி மனிதனின் வாழ்க்கையிலே மட்டுமல்ல ஒரு சமுதாயத்தின், ஒரு இனமக்களின் வாழ்க்கையிலேயும் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது எனவேதான் சொல்கிறேன், இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மொழிப் பிரச்சினையில் நாம் ஈடுபடும்போது நன்குகச் சிந்தித்து, முற்றமுடிய எல்லா விளைவுகளையும் சீர்தூக்கி வைத்து எண்ணிப் பார்த்து, பிறகுதான், செயலில் இறங்கவேண்டும்" பண்டிதர் இதுபோலப் பேசி இருக்கிறார், ஆனால் சென்னை மந்திரிகள் இதுபோல நடந்துகொண்டிருக்கின்றனரா? இந்திப் பிரச்சினையில் ஈடுபடுமுன்னால் ஆர அமர அதன் பல்வேறு விளைவுகளையும் எண்ணிப் பார்த்தனர் என்று எவரேனும் கூறமுடியுமா? முதலிலே தமிழகத்தில் மட்டும் விருப்ப பாடம்—பிற இடங்களிலே எல்லாம் கட்டாய பாடம் என்றனர், சொன்ன இரண்டு வாரங்களுக்குள் தமிழகத்திலும்கூட கட்டாய பாடம்தான் — எங்குமே ஒரே மாதிரி விதி இருப்பதே முறை—எனவே தமிழ் நாட்டிலும் கட்டாய இந்தியை நுழைத்துவிட்டோம் என்றனர், நமது அறப்போர் ஆரம்பமானதும், இந்தி கட்டாய பாடமாக இல்லை, இல்லவே இல்லை, நாங்கள் கட்டாய பாடமாக வைக்கவே இல்லை என்று "திடீர் பல்டி" போட்டனர், இன்று மற்றுமோர் விதமாகப் பேசுகின்றனர், எப்படியிருந்தாலும் இந்தி தேவைதானே, அது எந்த உருவத்தில் வந்தால்தான் என்ன என்று கேட்கின்றனர். இப்படி நாளுக்கொரு விதமாகவும் வேளைக்கொரு முறையாகவும் நமது அவினாசியார்களும் ஓமந்தூரார்களும் பேசுவது ஒன்றே போதுமே, அவர்கள் இந்தியைக் கட்டாய பாடமாக்கு முன்பு ஆரத்தீர எண்ணிப் பார்க்கவில்லை என்பதை விளக்க!

"நமக்கு மெஜாரிடி பலம் இருக்கிறது என்ற தைரியத்திலும் விருப்பமில்லாத மக்கள்மீது இந்தி மொழியைக் கட்டாய பாடமாகத் திணித்தால், விளைவு, நாம் விரும்புவதற்கு நேர்மாறானதாகவே முடியும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன்." என்பதைக் கூறிவிட்டு, பிரதமர் நேரு, "இந்தியாவுக்குப் பொதுமொழி தேவை என்பதற்காக எந்த மொழியையும் நாம் வலுக்கட்டாயமாக எவர்மீதும் திணிப்பதென்பது நிச்சயமாகக் கூடாது" என்று பேசி முடித்திருக்கிறார். சென்னை அமைச்சர்களின் செயல் எவ்வளவு விபரீதமானது என்பதை விளக்க, இதைவிட அருமையான சொற்கள் வேறு கிடையாது, அவ்வளவு தெளிவாகவும் திட்டமாகவும் அழகாகவும் பிரச்சினையை அலசிப் பேசி இருக்கிறார் பண்டிதர் நேரு.

இந்தி கட்டாய பாடம் வேண்டாம் என்று நாம் சொன்னோம், நம் அறிவுரையை ஏற்க மறுத்து விட்டது சென்னை சர்க்கார், போகட்டும், இந்த குறுமாளுக்கள் கூறுவதா, நாம அதைக் கேட்பதா என்ற 'வீம்பு' அதற்குக் காரணமாக இருக்கக்கூடும், இதோ பண்டித நேரு கூறுகிறார் "கட்டாயம்" என்பது கூடாது என்று! இந்த அறிவுரையைக் கேட்ட பிறகேனும், அவர்கள், தங்கள் சிறு மதி எனும் சிறையிலிருந்து விடுபட்டு, கட்டாய இந்தியை எடுத்தெறியப்போகிறார்களா அல்லது, "பண்டிதர் கூறினால் எமக்கென்ன — கட்டாய இந்தியை கட்டாயம் எடுக்க மாட்டோம்" என்று கூறிக்கொண்டு எதேச்சாதிகார இருட்டறையிலேயே உலவிக்கொண்டிருக்கப் போகிறார்களா, எதைச் செய்யப்போகிறார்கள் அவர்கள், எப்போது செய்யப்போகிறார்கள்?

போர்வாள்

13—11—48 சனிக்கிழமை

சென்னையிலே டில்லியாம்!... டில்லியிலே சென்னையாம்!

நாங்கள்—நாங்கள் என்றால்தான் உங்கட்குத் தெரியுமே மிக நன்றாக! போர்வாள் ஆசிரியர்கள்! அப்பாவும் பிள்ளையும்!—அன்று பகல் 11-மணிக்கு புதுப்பாலுப்பேட்டை பள்ளியிலிருந்து வேகமாகத் திரும்பி வந்தோம் அலுவலகத்திற்கு! தமிழர்தம் அறப்போர் எங்கள் ஊரிலே—ஆமாம் சென்னையிலே—நடைபெறுகிறது என்பதுமட்டுமல்ல, போர்க்களம் எங்கள் பேட்டைக்கே வந்துவிட்டது குறித்தும், களம் போர்வாள் நிலையத்திற்கு சில கெஜ தூரத்திலேயே இருப்பது குறித்தும் அளவில்லாத மகிழ்ச்சி எங்களுக்கு! களம் எங்கள் பேட்டையிலே இருக்கிறது என்பதால் மட்டுமல்ல பூரிப்பு, களம் அலுவலகத்திற்கு அருகே இருப்பதாலே நாங்கள் களத்திலே நித்த நித்தம் நிகழும் அறப்போருக்கு அதிக துணை புரியும் 'வாய்ப்பு' கிடைத்திருக்கிறது—அதுதான் எங்கள் மகிழ்ச்சிக்கு அடிப்படை! அந்த மகிழ்ச்சியும், போர் மிக மிக அமைதியாகவும், பகைவரும் கண்டு போற்றும் அரிய பெற்றியினதாகவும், நாளுக்கு நாள் மும்முரமாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறுகிறது என்பதை நேரிலே தினம் தினம் காண்பதால் ஏற்படுகிற பூரிப்பும் எங்கள் முகத்திலே புன்னகையைத் தவழவிட அந்தப் புன்னகையிலே நீந்திய வண்ணம் நாங்கள் அலுவலகத்திற்கு வந்தோம். உள்ளே அலுவலகத்தில் நுழைந்ததும் துணை ஆசிரியரின் மேஜைப் பக்கத்திலிருந்து மெல்லிய குரலிலே இன்னிசை ஒன்று காற்றிலே மிதந்து வரக் கண்டோம். கண்டு திகைத்துவிட்டோம் திகைப்புக்குக் காரணம், எங்கள் "துணை ஆசிரியர்" ஓர் ஆண்டு காலமாக போர்வாளிலே அலுவல் பார்க்கிறார், எங்களிடத்திலே தாராளமாகப் பழகுகிறார், ஒருவரை ஒருவர் மிக மிக நன்றாக உணர்ந்திருக்கிறோம், ஆனாலும் அவர் 'பாடுவார்' என்பது எங்களுக்கு அதுவரை தெரியாது.

திடுக்கிட்டோம் ஆனால் அடுத்த விநாடி அவர் எதைப் பற்றிப் 'பாடுகிறார்' அவ்வளவு சுவாரஸ்யமாக என்பதை அறியவேண்டும் என்ற ஆவல் மிகுந்தது. அறைக்குள் நுழைந்தோம். அவர் தன்னை மறந்து தனி இசை பாடிக்கொண்டிருந்தார். ஓசைப்படாமல் நடந்து முதுகில் லேசாகத் தட்டினோம். திடுக்கிட்டெழுந்தார். இன்றைக்கு மறியல் எப்படி? அரஸ்ட் உண்டா? என்று கேட்டார் வழக்கம் போல! "இன்று மறியல் வெகு ஜோர்! போலீஸ் கெடுபிடி வழக்கத்தை விட "கொஞ்சம் அதிகம்"—என்று சொல்லிவிட்டு, அது இருக்கட்டும், சப் எடிடர், இன்பம் கமழக் கமழத் தமிழ் இசை பாடினீர்களே, இவ்வளவு நன்றாகப் பாடுவீர்கள் என்பதை ஏன் இத்தனை நாளாக ஒளித்துவைத்திருந்தீர்கள்? ஆமாம் அது என்ன பாட்டு அது, அவ்வளவு ஆர்வத்தோடு இசைத்துக்கொண்டிருந்தீர்கள்" என்று நாங்கள் கேட்டோம். ஒன்றும் தெரியாதவர் போல், "நானா பாடினேன்! செ செ! கிடையாது சார்! எனக்குப் பாடவே தெரியாதே" என்று ஒரே அடியாக விஷயத்தையே மறைக்கப் பார்த்தார். நல்ல வேளை பக்கத்திலிருந்த ஆபீஸ் பையன் அதே பாட்டை சொல்லிக் காட்டினான்:—

"சென்னையிலே டில்லியாம்......டில்லியிலே சென்னையாம்...... தர நந நந ந தர நந .. சென்னையிலே டில்லியாம்,......டில்லியிலே சென்னையாம்......"

'கொல்' என்று சிரித்து விட்டனர் ஆபீசிலிருந்த அத்தனை பேரும்! நாங்களும்தான்! 'சிரிப்பு' எங்கள் அலுவலகத்திலே கொஞ்சம் அதிகம் எப்போதுமே, சிரிப்பு உடம்புக்கு ஒரு டானிக் என்று யாரோ "எக்ஸ்பெர்ட் டாக்டர்கள்" கூறுகிறார்களாமே, அதை அப்படியே நம்புகிறவர்கள் யாராவது உண்டென்றால் அது எங்கள் அலுவலக நண்பர்கள்தான்!

சிரிப்புக்கிடையே "சப்எடிட"ரைக் கேட்டோம் ஏன் சார் உங்க தியாகராஜ கீர்த்தனைக்கு என்ன சார் அர்த்தம் என்று.

அவர் பேசவில்லை. பக்கத்திலே இருந்த "ஹிந்து" பத்திரிகையை எடுத்து எங்களிடம் கொடுத்தார். அந்தப் பத்திரிகையிலே இரண்டு இடத்திலே, சப்எடிடர், சிகப்புப் பென்சிலாலே **மார்க் பண்ணியிருந்தார்.** [இது சென்னைத் தமிழ்! தனித் தமிழ் நண்பர்கள் மன்னிக்க] செய்தி 'சட்'டென்று எங்களுக்குப் புரிந்துவிட்டது!

இரண்டு செய்திகள் இருந்தன அந்த மவுண்ட்ரோட் மகாவிஷ்ணுவின் [இந்தப் பட்டமளித்த "குத்தூசி"யார் நீடூழி வாழ்க!] இதழிலே! அந்த இரண்டையும் ஒன்றுடன் ஒன்று பிணைத்து, சப் எடிடர், தன் மூளையைக் கொஞ்சம் செலவிட்டிருக்கிறார், விளைவு அந்த விசித்திரமான வசன கவிதை!

சென்னையிலே டில்லி!—"ஹிந்து," அந்தச் செய்தியைத் தந்திருக்கிறது. தந்துவிட்டு, ஆச்சரியப்படாதீர்கள், **டில்லியிலே சென்னை** என்ற செய்தியையும் தந்துதான் இருக்கிறது.

ஆமாம், நண்பர்களே, உண்மையாகவேதான், சென்ற வாரம், "டில்லி," சென்னைக்கு வந்திருக்கிறது, சென்னையும் டில்லியிலே பேசி இருக்கிறது!

"டில்லி," தரை வழியாக அல்ல, வான வீதியிலே இன்ப நாதம் எழுப்பிய வண்ணமுமல்ல, நீலத் திரைக் கடல் வழியாக சென்னைக்கு வந்தது. வந்தது என்றால் சும்மா வரவில்லை; கொட்டு முழக்கத்தோடு, மேளதாளத்தோடு வந்தது. **அட்மிரல் ஹால்** அதை ஓட்டிக்கொண்டு வந்தார். ஏறத்தாழ ஒரு வாரம் டில்லி

சென்னையில் இருந்தது. நான்கு நாட்கள் டில்லி, சென்னைக்குப் பேட்டி தந்தது. முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமியாரிலிருந்து மாணவர்கள் தாய்மார்கள் பொதுமக்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானவர்கள் டில்லியின் தரிசனம் பெற்றனர். பிறகு, டில்லி இலங்கைக்கோ, வேறு இடத்திற்கோ, சரியாக நினைவில்லை, சென்றுவிட்டது!

ஏறத்தாழ அதே நேரத்திலே, டில்லியிலே சென்னை, இடிமுழக்கம் செய்திருக்கிறது; வீர கர்ஜனை புரிந்திருக்கிறது. டில்லியிலே என்றால் எங்கோ சந்து முனையிலேயோ அல்லது பூம்பொழில் நடுவிலேயோ அல்லது பாழடைந்த மைதானத்திலேயோ அல்லது ஊராளும் உத்தமர்களின் செவிக்கு தன் குரல் கேட்க முடியாத தொலை தூரத்திலிருந்து கொண்டோ அல்ல. இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் ஆட்சி புரியும் பொறுப்பை ரொம்ப பெரிய மனசு வைத்து தாமாகவே மனமுவந்து ஏற்றுக்கொண்டிருக்கிற டில்லி தேவதைகள் கொலு வீற்றிருக்கும் அந்த அரசியல் ஆக்க மன்றத்தில் பேசி இருக்கிறது சென்னை! நாடாளும் "நல்ல" கனவான்களின் செவி கேட்டே தீரவேண்டிய இடம்!

சென்னைக்கு டில்லி வந்தபோது டில்லிக்கு சென்னை போக வேண்டாமா, ஆகவே போய் இருக்கிறது, போய், சரியான இடத்தில், சரியான சமயத்தில், சரியான ஆட்களுக்கு, சரியான சவுக்கடி கொடுத்தும் இருக்கிறது!

சென்னைக்கு டில்லி வந்தது—"டில்லி" என்ற கப்பல்! இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து விலைக்கு வாங்கினார்கள் இக் கப்பலை. கப்பலின் பழைய பெயர் அகில்லஸ்! அகில்லஸ் கிரேக்க நாட்டு மாஜி கடவுள்களிலே ஒன்று! வெள்ளிக் கால் தீசியஸ் என்று ஓர் கடவுள் இருந்தார் அந்தக் காலத்திய கிரீசில்! அவருடைய குமாரன் அகில்லஸ்! அகில்லசை தேவலோகம் தங்கள் சந்ததியைச் சேர்ந்தவன் என ஒப்புக்கொள்ள மறுக்கிறது. ஆகவே அவன் பூலோகத்திற்கு வருகிறான், கிரேக்க நாட்டிலே போர் வீரனாகத் திகழ்கிறான்! அந்த அகில்லசின் பெயர் கொண்ட கப்பலைத்தான் இந்திய சர்க்கார் வாங்கினார்கள், வாங்கி டில்லி என்ற திருநாமத்தைச் சூட்டினார்கள்!

ஜல உஷா! இந்தியக் கடலிலே மிதக்கவிடப்பட்ட முதல் இந்தியக் கப்பலின் பெயர் இது! இரண்டாவது கப்பலின் பெயர் **ஜல ஜவஹர்!** இப்போது விலைக்கு வாங்கப்பட்ட கப்பல் புதிய பெயர் சூட்டப்படுகிறது—சூட்டப்பட்டுள்ள பெயர் டில்லி! **டில்லி**யுடன் துணையாக மற்றொரு கப்பல் வந்துள்ளது—பெயர் **சட்லெஜ்!** ஜல உஷா! ஜல ஜவஹர்! டில்லி! சட்லெஜ்! இவற்றைத் தவிர வேறு பெயர்கள் கிடையாதா, வேறு பெயர்களைச் சூட்டக்கூடாதா, சூட்டினால், கலம், கடலிலே செல்லாதா, ஏன் வடநாட்டுப் பெயர்களே சூட்டப்படுகின்றன வரிசை வரிசையாக! ஒரே ஒரு சிறு கலத்திற்கு கிருஷ்ணா என்று பெயரிட்டிருக்கிறார்கள். அதுகூட கிருஷ்ணாவைத் தாண்டி கீழே வர மறுக்கிறார்கள்! ஏன் காவிரி என்று பெயரிடக் கூடாது? ஏன் சென்னை என்று ஒரு கப்பல் அழைக்கப்படக்கூடாது? ஏன் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இத்தாலியுடனும் கிரேக்க நாட்டுடனும் வாணிபம் செய்துவந்த தமிழகத்திற்கு அந் நாளிலே துறைமுகப் பட்டினங்களாக விளங்கிய—தென்னாட்டு நாகரிகம் மிகச் சிறந்தது, பண்பட்டது, பழையது, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மேலை நாடுகளுடன் கப்பலோட்டி கடல் வாணிபம் செய்துவந்தது என்பதையெல்லாம் எடுத்து விளக்கும் நாகரிகச் சின்னங்கள் எனத்தகும் **முசிறி கொற்கை புகார்** போன்ற பழந் தமிழ்ப் பட்டினங்களின் பெயர்கள் சூட்டப்படக்கூடாது?

வடநாட்டுத் தேவதை—உஷா!
வடநாட்டுத் தலைவர்—ஜவஹர்!
வடநாட்டு நகரம்—டில்லி!
வடநாட்டு ஆறு—சட்லெஜ்!

உஷாவையும் ஜவஹரையும் டில்லியையும் சட்லெஜையும் விட்டால் வேறு பெயர்களே கிடையாதா பரந்த இந்த உலகத்தில்? ஏன் சேரன் செங்குட்டுவன் என்று ஒரு கப்பல் அழைக்கப்படக் கூடாது? பர்மாவில் தன் புலிக்கொடி நாட்டிய அந்த மாவீரன் இராஜேந்திர சோழனின் பெயராலே ஏன் ஒரு கப்பல் கடலிலே மிதக்கக் கூடாது? உலகம் முழுவதும் வியந்து போற்றுகின்ற ஒப்பற்ற இலக்கியமாகிய திருக்குறள் ஏன் ஒரு கப்பலின் பெயராக இருக்கக் கூடாது? சுதந்தர இந்தியாவிலே சுதந்தரக் கடல்மீது ஓடும் உரிமை பெற்ற முதல் சுதந்தரக் கப்பலின் பெயர்—நாம் பெற்றிருப்பது உண்மையான சுதந்தரம் என்பது உண்மையானால், வடநாடாவது தென்னாடாவது அந்தப் பேத புத்தி தேசியத் தலைவர்களுக்குக் கிடையாது என்று காண்டீபங்களும் கர்த்தபங்களும் சுதந்தராக்களும் சுரண்டல் பூனைகளும் கதறுவது மெய்யானால், **வீர சிதம்பரம்** என்றல்லவா இருந்திருக்க வேண்டும்? நெல்வேலிச் சீமையிலே பிறந்த அந்த மறத் தமிழன் அல்லவா, அந்த சேரன் செங்குட்டுவனின் சொந்தக்காரன் அல்லவா, அந்த தூத்துக்குடி தூயோன் அல்லவா பலம் பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் அதை விட பலம் மிகுந்த பிரிட்டிஷ் வணிக வேந்தர்களையும் தன்னந் தனியாக எதிர்த்து நின்று, போட்டிக் கப்பல் கம்பெனி கண்டு, அடிமை இந்தியாவில் சுதந்தரக் கப்பலை ஓட்டிக் காட்டினான்? படை பலமா, பண பலமா, சர்க்கார் தன் பக்கம் என்ற எண்ணத்தால் வரும் சிந்தனை பலமா என்ன இருந்தது சிதம்பரனாருக்கு எதையும் தாங்க இந்த இதயம் உண்டு என்ற அஞ்சாமைக் கேடயம் ஒன்றைத் தவிர! சர்க்கார் அவருக்கு ஜென்ம தண்டனை தந்தது, நாடு அவரை அலட்சியக்கண்ணோடு பார்த்தது, பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி பஞ்ச தந்திரங்களையும் கையாண்டது அவருடைய முயற்சியைக் குலைக்க! என்றாலும் சிதம்பரனார் நெஞ்சம் அயரவில்லை, வாட்டமோ வருத்தமோ கொள்ளவில்லை, சோர்ந்து சாயவில்லை, கருண்டு மடியவில்லை, என் செய்வேன் இறைவா கச்சி ஏகப்பனே என்று பரிதாபச் சிந்து பாடவில்லை, நிமிர்ந்து நின்றார்—தமிழ் இனம் வெல்லும் என்று முழங்கினார்—சுதந்தரக் கப்பலை ஓட்டியே காட்டினார்!

ஆம்! அடிமை நாட்டிலே சுதந்தரக் கப்பலை ஓட்டினார் வீர சிதம்பரம்! ஆனால் அவர் பெயர் சூட்டப்பட

(10-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

போகும் நேரத்தில் தன் மனைவியிடத்தில் அது போன்ற கருத்தைத் தெரிவிக்க துணிவு கொண்ட கணவன்—புரட்சி மனிதன் — இருப்பான் என்று நான் முன்பெல்லாம் எண்ணியதுண்டு. நானே அந்த மாதிரியான நிலைமைக்கு வந்துவிட்டதால், மனத் திருப்தியோடு இதனை உன்னிடம் தெரிவிக்கிறேன். என் இதய ஆசை இதுதான். கூறிவிட்டேன்! இதன்படி நடந்து கொள்!"

"ஏதேதோ கூறுகிறீரே!" என்று கண்களைத் துடைத்துக் கொண்டே கேட்டாள் குமுதம். அதுவரைக்கும் கண்ணீரை மறந்திருந்த கண்கள், கண்ணீர்க்கடலாயின!

மூன்று நாட்களுக்குப் பிறகு சிவன் கண்களை மூடினான்! குமுதம் கைம்பெண்ணானாள்!

குமுதமும் அவள் தந்தையும் மீளாத் துன்பக் கேணியில் ஆழ்ந்தனர். நாட்கள், மாதங்கள் சென்று கொண்டே இருந்தன. குமுதம் பத்திரிகைகளில் வெளிவரும் ஜமீந்தார் கொலை வழக்கை மிகுந்த கவனத்தோடும் ஆர்வத்தோடும் உள்ளத் துடிதுடிப்போடும் வாசித்துக்கொண்டு வந்தாள்.

குமார் தன்னிடம் விடை பெற்று பழத்தூருக்குச் சென்றதும், ஜமீன்தாரின் கொலைக்குப் பிறகு பதுங்கி அவன் வாழ்ந்ததும், சிவனைத் தான் மணந்ததும், குமார் பிடிபட்டதும், தான் விதவையானதுமான ஓர் ஆண்டிற்குள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் குமுதத்திற்குக் கனவு போல் தோன்றின.

பழையபடி அவள் உள்ளம் அடிக்கடி குமாரை நாடிச் சென்றது. சிறையிலிருந்து அச்சுகுமாரன் என்று வருவானென்றெண்ணி எண்ணி கண்ணீர் உகுத்தாள் குமுதம்.

இருபதாவது பகுதி
"பயம் வேண்டாம்"

மாந்தோப்பு! அதன் மத்தியில் செந்தாமரை மலர்கள் பூத்துச் சிரிக்கும் புதுப் புனல் தடாகம்! மாலை நேரம்! சிறகடித்துப் பறக்கும் சிறுசிறு பறவைகளின் இனிய இசை! மாந்தேன் அருந்தும் வண்டுகளின் ரீங்காரம்!

வாடைக்காற்று வீசிக்கொண்டிருக்கையில் வருத்தம் கப்பிய முகத்தோடு குமார் தோப்பினுள் நுழைந்தான். அசைந்தசைந்து மெள்ள வந்து அருகிலிருந்த குளக்கரையில் ஆயாசத்தோடு அமர்ந்தான்.

நீரில் சலசலப்பு ஒலி கேட்கவே தலை நிமிர்ந்து அப்பக்கம் பார்த்தான். இளைப்போடு இருந்தவனின் உடலில் இரத்தம் வேகமாக ஓடி, ஓர் புத்துணர்ச்சியைத் தந்தது. கண்கள், தம் இமைகளை, "இன்னும், இன்னும் மேலே போங்கள்," என்று விரட்டி அடித்தன! தண்ணீரில் குளித்துக் கொண்டிருந்த தளிர்மேனியாளின் அருகில் தான் செல்ல எழுந்தான். அதற்குள் அவளே நீரைவிட்டு, மெல்லிய ஈரப் புடவையைத் தன் தங்க உடலில் சுற்றிக்கொண்டு மேலே வந்தாள். இமைகொட்டாத கண்களால் ஒருவரை ஒருவர் உண்ணத் தொடங்கினார்கள்.

"வாடைக்காற்று வீசும் நேரத்தில், குளிர்ந்த நீரில் குளிக்கிறாயே, உனக்குக் குளிரெடுக்க வில்லையா, வேணி?" என்று குமார் தன் பேச்சை ஆரம்பித்தான். வேணி நனைந்த சேலையைச் சரிசெய்து கொண்டு, நாணமும் குறும்பும் கலந்த பார்வையை அவன்மேல் வீசினாள்.

"வாடைக்காற்றா? அனல்காற்று அல்லவா, அத்தான் வீசுகிறது?" என்று புன்னகையோடு வேணி கூறிவிட்டு, நடக்கத்தொடங்கினாள். குமாரும் அவளைப் பின்தொடர்ந்தான்.

"குளத்திற்கு வந்து குளிக்காமல் ஏன் அத்தான் திரும்பிவிட்டீர்?" என்று கேட்டுக்கொண்டே வேணி நின்றாள். என்னபதில் கூறுவதென்றே குமாருக்குத் தோன்றவில்லை. அவளைப்பார்த்து குறுநகை செய்தான், அதுதான் அவனால் அந்நேரத்தில் சுலபத்தில் செய்ய முடிந்தது! வேணி அடி எடுத்துவைக்க ஆரம்பித்தாள்.

"வேணி! ஒருசொல், கேட்டுவிட்டுப் போயேன்," என்றான், கம்மலான குரலில்!

"என்ன, அத்தான்?" என்று சிற்றிடையாள் திரும்பினாள். குமார் வானத்தையும் தரையையும் மாறி மாறிப் பார்க்கலானான்! தன் தாகத்தைத் தையலிடம் கூற அவனுக்குத் தைரியம் வரவில்லை. அந்நேரத்தில் இருவரும் மௌனமாகவே சிறிது நேரமிருந்தார்கள்.

"சரி அத்தான், நேரமாகிறது நான் போய் வருகிறேன்!...... ...... யோசித்துக்கொண்டு வீட்டிற்கு வாருங்கள்! அண்ணாவும் இருப்பார் அப்பொழுது கூறினால் நாங்கள் இருவரும் கேட்போம்!" என்று குறும்பு நிறைந்த குரலில் கூறினாள்.

"இது உன் அண்ணாவிற்குத் தெரியக் கூடாது!"

"ரகசியமா?"

"ஆமாம்! இப்பொழுது சொல்லட்டுமா?"

"ஹூம்!"

"இதோ, இதோ, இப்படி வாயேன்!... ..சொல்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவளருகில், மிகவும் அருகில், சென்றான்!

வேணி வெட்கத்தோடு தலை குனிந்தாள். தன் கையால் அவள் தலை நிமிர்த்தி, பயப்படுகிறாயா, என்றான். அவள் உடல் குலுங்கியது! காளையின் மார்பில் கன்னம் சாய்ந்தாள்!

"வே......ணி......" என்று அவனது உதடுகளின் அசைவிலிருந்து ஒலி எழ, அவனது கைகள் அழகியை அணைத்தது.

"வேணி" என்று குமார் பிதற்றியதைக் கேட்ட கோபால் அவனைத் தட்டி எழுப்பினான். குமார் திடுக்கிட்டு எழுந்தான். கண்டது கனவுதான் என்பதை அறிந்ததும் ஏமாற்றமும் வருத்தமுமடைந்தான்.

"குமார், என்ன ஏதேதோ தூக்கத்தில் பேசுகிறாய்?" என்று கோபால் கேட்டதும், குமார் மௌனமாகவே இருக்கவே, "ஏதாகிலும் கனவு கண்டாயா?" என்று திரும்பவும் கோபால் வினவினான்.

"ஆமாம்!" என்று குமாரின் வாய் பதறி பதிலளித்துவிட்டது.

"என்ன கனவு குமார்?" கோபாலின் இக்கேள்வி குமாரை ஆபத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டது.

தாமரைக் குளத்தில், ஈர ஆடையுடன், பொங்கும் இளமை வழிந்தோட வேணிநின்ற காட்சியைக் கூறுவதா? மாலைப் பொன் வெய்யலில் மாந்தோப்பில் மலர்

முகத்தாளோடு வழி நடந்ததை உரைப்பதா? "ஒரு சொல்" என்று அவளைக் கெஞ்சினனே, அதனைச் சொல்வதா? பரவசத்தால் பாவை தன் மார்பில் சாய்ந்தாளே, அதனைப் பகர்வதா? எதனைச் சொல்வது? உன் தங்கையும் நானும் தழுவி மகிழ்ந்தோம் கனவில், என்று அவள் அண்ணனிடமே சொல்ல முடியுமா? சங்கடமான நிலைமையில் குமார் சிக்கிக்கொண்டான். யோசித்தான். நிலைமையைச் சமாளிப்பது எப்படி என்று அவனுக்குப் புரியவில்லை. திடீரென்று மின்னல் வேகத்தில் ஒரு யோசனை தோன்றியது!

ஆபத்து எனும் ஆற்றைக் கடக்க, பொய்ப்படகு ஏறித்தான் ஆகவேண்டும் என்ற முடிவிற்கு வந்தான். இவ்வளவும் ஓர் கணநேரத்தில் அவன் மனத்திரையில் தோன்றி மறைந்தன. தைரியம் பெற்று பேச ஆரம்பித்தான்.

"கோபால், ஒரு பயங்கரமான கனவு கண்டேன். நீயும் நானும் இரவில் போலிசாருக்குப் பயந்துகொண்டு சுற்றுமுற்றும் பார்த்த வண்ணம் உன் வீட்டின் அருகில் செல்கிறோம். அப்பொழுது வீட்டினுள் இருந்து வேணியின் கதறல் குரல் கேட்கவே, இருவரும் உள்ளே ஓடுகிறோம். "உன் அண்ணனும், குமாரும் எங்கே ஒளிந்துகொண்டிருக்கிறார்கள், உண்மையைச் சொல்" என்று கூறிக்கொண்டே ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வேணியைச் சாட்டையால் அடித்துக்கொண்டிருக்கிறான். வேணியின் கைகளிலிருந்து இரத்தம் கசிவதைக் கண்ட நான் பதறி வேணி என்று கதறிவிட்டேன்.........."

"ஓகோ! அதனால்தான் வேணி என்று உண்மையிலேயே அலறிவிட்டாயா? சரி...தூங்கு..." என்று கோபால் கூறியதும் இருவரும் படுத்துக்கொண்டார்கள். குமாரின் உடல் தரையில் கிடந்ததே ஒழிய அவனது மனம் எழுந்து நின்று பல்வேறு திசைகளில் ஓடத்தொடங்கியது!

பொழுது புலர்ந்தது. கதிரவனின் செங்கிரணங்கள் சிறைச்சாலையினுள் நுழைந்து, குமாரையும் கோபாலையும் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பின. சிறை வார்டன், சிறை அறையைத் திறந்து அவர்களை வெளியே அழைத்துச் சென்றான். காலைக் கஞ்சி குடித்துவிட்டு, வழக்கப்படி கம்பிகளுக்கிடையில் அடைபட்டார்கள்.

"கோபால், இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்" என்று குமார் கேட்டான்.

"அடிக்கடி நம்மை வந்து அவர் பார்ப்பதிலிருந்தும், பேசும் முறையிலிருந்தும் அவர் நல்லவராகத்தான் தோன்றுகிறார்."

"அவர் நல்லவரா, கெட்டவரா என்பதைப்பற்றி நான் கேட்கவில்லை. அவரால் நமக்கு ஏதாகிலும் நன்மை ஏற்படுமா?"

"உபகாரம் செய்ய வேண்டுமென்ற உத்தேசத்தின் பேரில்தானே, நம் விரோதிகளைப்பற்றி எல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்னர் விசாரித்துக் குறித்துக்கொண்டார்........."

"எனக்கென்னமோ, நாம் விடுதலையடைந்து வீடு திரும்புவோம் என்ற நம்பிக்கையே இல்லை!"

கோபால் இதற்கொரு பதிலும் கூறவில்லை. என்ன பதில் கூற முடியும்? எதிர்காலத்தில் இன்ன இன்ன நிகழ்ச்சிகள் நடைபெறப் போகின்றன என்று முன்கூட்டியே அறியும் ஆற்றல் எவரிடம் உள்ளது?

காதலி குமுதத்தினிடம் விடைபெற்று பிரிந்த நேரத்தில் கம்பிகளுக்கிடையில் சிக்கி கண்ணீர் வடிக்கப் போகிறோம் என்ற செய்தி குமாருக்குத் தெரியுமா? ஏழை விவசாயிகளின் கூட்டத்தில் அன்று சிங்க ஏறுபோல் முழக்கமிட்டானே, அப்பொழுது கோபால் அறிவானா கொலைகாரன் என்ற பழிச்சொல் ஏற்று, சிறையில் சிக்கி வாடப்போகிறோம் என்பதை? மை இருட்டில் முன் பின் கண்டறியாத இடத்தில் நடப்பதைப் போன்றது, மனிதனின் எதிர்கால சம்பவங்கள்!

சிறைச்சாலைத் தாழ்வாரத்தில் யாரோ வரும் பூட்ஸ் சப்தம் கேட்கவே இருவரும் கம்பிகளின் பக்கமாக தம் கண்களைத் திருப்பினார்கள்.

பூர்ணலிங்கம் வருவதைக் கண்டதும் அவர்கள் எழுந்து கம்பிகளின் அருகே சென்றார்கள், இன்ஸ்பெக்டர் அறையின் முன்வந்து நின்றார். அவர் முகம், முன் தடவைகளைவிட இப்பொழுது சிறிது மகிழ்ச்சி நிறைந்ததாகக் காணப்பட்டது.

"உங்களுடைய வழக்கின் சம்பந்தமாக இன்று நான் பழத்தூருக்குச் செல்லப்போகிறேன்." என்று பூர்ணலிங்கம் கூறினார்.

"ஏதாகிலும் தகவல் கிடைத்திருக்கிறதா?" என்று குமார் வினவினான்.

"ஆமாம் நம்பத்தகுந்த இடத்திலிருந்து உண்மையே வெளி வந்திருக்கிறது!,'

"விவரமாகச்சொல்லமுடியுமா?"

"எனக்கு நேரமில்லை, இன்னும் ஒரு வாரத்தில் திரும்பிவிடுவேன். பிறகு வந்து சந்திக்கும்போது தெரிவிக்கிறேன்."

குமாரும் கோபாலும் ஒன்றும் பேசவில்லை. ஆனால் பூர்ணலிங்கத்தை அவர்கள் பார்த்த பார்வையில் பரிதாபம் வழிந்தது.

பரிவோடு இன்ஸ்பெக்டர் அவர்களைப் பார்த்து, "பயம் வேண்டாம்! உங்களுக்கு நிச்சயம் நான் உதவியாக யிருப்பேன்! வருந்தாமல் இருங்கள். வந்து பிறகு பார்க்கிறேன்." என்று அவர்களுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, அவ்விடத்தை விட்டு வெளியே சென்றார்,

(தொடரும்)

மூல வியாதிகளுக்கு

"யௌவன பிராஷ்"

(கருணைக் கிழங்கு லேகியம்)

ஆபரேஷன் பயன்தராது. மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், குத்துவலி, மலபந்தம், வாய்வு, பவுத்திரக் கட்டிகள், 3 வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து, சுகம் காணலாம்.

12 நாள் யௌவன பிராஷ் ரூ. 3
(காலை சாப்பிட)

12 நாள் நாகபஸ்பம் ரூ. 2
(மாலை சாப்பிட)

சரஸ்வதி வைத்தியசாலை
பழனி S. I.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லே சுதந்தர நாட்டிலே ஓடவரும் கப்பல்கட்கு! பெயர் சூட்டப்படாதது மட்டுமா, அவருடைய தீரச் செயலைப் பாராட்டி, பாராட்டக்கூட வேண்டாம் நினைவூட்டியாவது பிரதமர் நேருவோ மற்ற தேசியத் தலைவர்களோ இரண்டொரு சொல்கூடக் கூறவில்லை இன்றுவரை! செய்ந்நன்றி கொன்ற மாபாதகமே! உன் பெயர்தான் தேசியம்!

பண்டித ஜவகர்தான் கூறவில்லை—அவர் வடநாட்டுக்காரர் ஆகவே தென்னாட்டு சிதம்பரம் அவர் கண்ணிலே படவில்லை, நம்ம ஓமந்தூரார் டில்லி கப்பலைப் பார்வையிடப் போனாரே அப்போதாவது ஒரு வார்த்தை—ஒரே ஒரு வார்த்தை கூறி இருக்கக் கூடாதா வீரர் வ. உ. சி யைப் பற்றி!

தென்னாட்டுக் கடலிலே "டில்லி" பவனி வருகிறது—பிரதமர் பார்வையிடுகிறார்—மேயர் காட்சி காண்கிறார்—கூட்டம் திரள் திரளாய்ப் போகிறது—ஆனால் சிதம்பரனாரைப் பற்றி வார்த்தை ஒன்று பேசுவாரும் இல்லை! வேதனை தரும் சேதி, ஒரு தமிழனுக்கு, இதைவிட வேறென்ன இருக்க முடியும்?

சென்னைக் கடலிலே, "டில்லி," ஒய்யாரமாக "ஓய்வு" கொண்டிருந்த அதே வேளையிலே, டில்லியில் உள்ள அந்த அழகிய பெரிய அற்புதமான அரசியல் ஆக்க மன்ற மண்டபத்திலே, "சென்னை," டில்லிக்கு எச்சரிக்கை செய்திருக்கிறது.

"டில்லியே! நாடாளும் உரிமை ஏதோ உனக்குக் கிடைத்துவிட்டது என்பதற்காக, அதிகார மமதை எனும் குன்றேறி நின்றுகொண்டு உன் மனம் போன போக்கில் இத் துணைக் கண்டத்தை ஆட்டிப் படைக்கலாம் என்று ஆணவச் சிந்தை கொள்ளாதே. இன்று தென்னாடு, பொறுத்துக் கொண்டுதானிருக்கிறது நீ செய்யும் பொறுக்க முடியாத கொடுமைகளை, ஆனால் என்றுமே அப்படி இருக்கும் என்று எண்ணிவிடாதே! தென்னாட்டிலேஏற்கனவே பிரிவினைஉணர்ச்சி வலுப்பெறுகிறது, தென்னாடு தனி நாடு என்ற இடிமுழக்கம் விண் அதிர எழுந்துவிட்டது, திராவிடநாடு திராவிடருக்கே என்ற உரிமைச் சொல் திராவிடமெங்கணும் கணீர் கணீர் என ஒலிக்கிறது, டில்லியே, இது உன் நினைவிலே இருக்கட்டும். உன்னுடைய ஏகாதிபத்திய சிந்தனையும் செயலும் வளர வளர தென்னாட்டுப் பிரிவினை உணர்ச்சியும் ஒன்று பத்து நூறாக வளர்கிறது, இதை மறந்துவிடாதே! உனக்கு நீயே குழி தோண்டிக்கொள்ளாதே! நம்மை யார் என்ன செய்ய முடியும் என்ற அகம்பாவத்தாலே அழிந்து போகாதே! வேண்டாம் வேண்டாம்!"

சென்னை, டில்லியைக் கூப்பிட்டு இதுபோலக் கூறி இருக்கிறது சென்ற கிழமை. இந்தச் செய்தியையும் "ஹிந்து" தந்திருக்கிறது தன்னுடைய இதழிலே! சென்னையிலே டில்லிக் கப்பல் சொகுசாகத் தங்கி இருந்து ஜோராகக் காட்சி தரும் சேதி ஒரு பால்! டில்லி மண்டபத்திலே சென்னைக் குரல் டில்லி ஏகாதிபத்தியத்தின் பிடரியைப் பிடித்துக் குலுக்கிய குதூகலச் சேதி மற்றொரு பால்! இரண்டையும் "ஹிந்து" தந்திருக்கிறது—"ஹிந்து" என்றால் எப்படிப்பட்ட "ஹிந்து"? வடநாடாவது தென்னாடாவது என்று கெக்கலி கொட்டுகின்ற குருட்டு வழக்கமுடைய ஹிந்து! திராவிடநாடா அது குறுகிய நோக்கம் என்று கூறுவதன்மூலம் தன் "பரந்த" மனோபாவத்தைப் பாருக்கெல்லாம் விளம்பரப்படுத்த விரும்பும் விபரீத "ஹிந்து"! கருப்புச் சட்டை என்றதும் காததூரம் ஓடுகின்ற "ஹிந்து"! ஆரிய "ஹிந்து"! அந்த ஹிந்துவிலே வந்துள்ளன இந்த இரு சேதிகளும்! எனவே போர்வாள் சப்—எடிடர் "சென்னையிலே டில்லியாம்......டில்லியிலே சென்னையாம்" என்று சங்கீதம் பாடியதிலே என்ன வியப்பிருக்கிறது?

சப்—எடிடர் சங்கீதம் இருக்கட்டும், அதைப் பிறகு கேட்டு ரசிப்போம், டில்லியிலே, சென்னையின் கருத்தை, அதாவது தென்னாட்டின் உள்ளத்தை, வேறு வார்த்தையில் கூறுவதானால், திராவிட நாட்டவர்தம் உள்ளக் கிடக்கையைப் படம்பிடித்துக் காட்டிய கனவானிடம் கொஞ்சம் செல்வோம்.

"யார் அந்தக் கனவான்—அதைக் கூறவில்லையே நீங்கள்?" என்று கேட்கிறீர்களா, ஆமாம், நியாயமான கேள்விதான், கேட்கப்படவேண்டிய கேள்வி! ஏன், நீங்கள்தான் சொல்லுங்களேன் பார்க்கலாம் யாராய் இருக்க முடியும் டில்லியிலே சென்னைக் குரலெழுப்பிய அந்த தென்னாட்டுக் கனவான்?

காமராஜர் என்கிறீர்களா?—இல்லை! அவருக்கு ஏது நேரம் தென்னாட்டு மக்கள் வடநாட்டவரால் வதைபடும் இந்தச் சின்னப் பிரச்சினையைப்பற்றி எண்ணிப் பார்த்துப் பேச! அவர்தான் எந்த மந்திரியைக் கவிழ்த்தால் எந்த மந்திரியை ஏற்றி வைக்கலாம், ஓமந்தூராரை ஒழிப்பதெப்படி, சுப்பராயனுக்குப் பீடம் தருவதெப்படி, யார் யாரைக்கொண்டு யார் யாரை வீழ்த்தலாம் என்பன போன்ற மகத்தான பிரச்சினைகளில் ஈடுபட்டிருக்கிறாரே! பெரிய மனிதர்! அவர் இந்த சின்னப் பிரச்சினைகளை எல்லாம் கவனிக்க முடியுமா? செ! செ! அவர் இல்லை!

குமார ராஜாவா? — அவருக்கென்ன கவலை இதுபற்றி? அவர், குமார ராஜா ஸ்தானத்திலிருந்து, அப்பா இறந்ததாலே ராஜா ஸ்தானத்திற்கே உயர்ந்துவிட்டார், குமார ராஜாவாக இருந்தபோதே ஊரைப் பற்றியும் ஊரிலே உள்ள மக்களைப்பற்றியும் சிந்திக்காதவர் இப்போதா சிந்திக்கப்போகிறார்? இல்லை சார் இல்லை, அவர் இல்லை! அவர் அங்கே இருப்பது தென்னாட்டு மக்களின் நலன்களைக் காப்பாற்றுவதற்காகவா—இல்லையே! சொந்த நலனுக்கு 'சொட்டு' வராமல் பார்த்துக் கொள்வதற்குத்தானே! பிறகு......அவர் எப்படி நாட்டு மக்களைப்பற்றிப் பேசமுடியும்?

பேசியது காமராஜருமல்ல குமார ராஜருமல்ல! டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!

ஆம்! ஆரியர்தான் அவர்! ஆனால் அவர்தான் பேசி இருக்கிறார் டில்லி மண்டபத்தில்—தெளிவாக, திட்டமாக, அழுத்தந் திருத்தமாக! பேசி இருக்கிறார் என்று சொன்னோம் — தவறு அது — அவர் பேசவில்லை அங்கே!—எச்சரிக்கை செய்திருக்கிறார், இடி முழக்கம் புரிந்திருக்கிறார்! ஆதிக்க வெறிகொண்டு அலையும் வடநாட்டவர்க்கு, தென்னாட்டிலே பிரிவினைக் கிளர்ச்சி அலைமோதிக்கொண்டிருக்கிறது என்னும் உண்மையை அழகாகப் படம் பிடித்துக் காட்டி இருக்கிறார்!

ஆரியர்தான் அவர் ஆனால் அதற்காக நாம் அவருடைய அஞ்சாமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. உண்மை!—அதை யார் எப்போது சொன்னாலும் நாம்—நாம் என்றால் சுயமரியாதைக்காரர்கள் உண்மை உரைப்பவர்களைப் பாராட்டத் தயங்கியது என்பது நம் வாழ்க்கை வரலாற்றிலேயே கிடையாது! இனியும் இருக்க முடியாது!

காமராஜரின் கருத்திலே நுழைய மறுக்கும் கருத்தினை, குமார ராஜாக்கள் கண்ணெடுத்துப் பார்க்கவும் நினைக்காத எண்ணத்தை, தென்னாட்டின் பிரதிநிதிகளாக அங்கந்த மண்டபத்தில் கொலு வீற்றிருக்கும் நவராத்திரிப் பொம்மைகள் எதுவும் வாய்திறந்து பேச அஞ்சிடும் உண்மையை ஒளிக்காமல் மறைக்காமல் பேசி இருக்கிறார் கிருஷ்ணமாச்சாரியார்—நம் நன்றி அவருக்கு! மனமுவந்த பாராட்டுதலும் கூட!

"டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் டில்லியிலே அழுத்தந்திருத்தமாகக் கண்டித்துப் பேசினார்"—ஹிந்து பத்திரிகையின் சொந்த நிருபர்தம் கூற்று இது! நம்முடைய சரடு அல்ல, ஈரோட்டுச் சரக்கு அல்ல!

அழுத்தந் திருத்தமாகக் கண்டித்தாரே எதைக் கண்டித்தார் அவ்வளவு கோபத்தோடு? அதையும் கூறுகிறார் ஹிந்து நிருபர், T. T. Krishnamachariar made a downright condemnation of what he described as the language imperialism! மொழிவழி ஏகாதிபத்தியம் என்று அவரால் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி முறையைத் திட்டவட்டமாகக் கண்டித்துப் பேசினார் கிருஷ்ணமாச்சாரியார் என்று எழுதி இருக்கிறது "ஹிந்து"

யார் அந்த மொழிவழி ஏகாதிபத்தியத்தைக் கட்டியாளுவது! கூற மறக்கவில்லை கிருஷ்ணமாச்சாரியார்! ஹிந்துவின் வார்த்தைகளிலே கூறுகிறோம். Language imperialism of the leaders from the Northern Provinces—மொழிவழி ஏகாதிபத்தியம் வடநாட்டுத் தலைவர்களாலே வளர்க்கப்படுகிறது!

ஹிந்தி, வடநாட்டு மொழி. அதை தென்னாட்டின் மீது வலுக்கட்டாயமாகத் திணிப்பதன் மூலம் தென்னாட்டின் மீது தங்களுக்குள்ள பிடிப்பை நிரந்தரமானதாகவும் அழுத்தமானதாகவும் ஆக்கிக்கொள்ள விரும்புகின்றனர் வடநாட்டவர்கள். ஆங்கிலேயர்கள் எப்படி தங்கள் ஏகாதிபத்தியத்தை இந்தியாவில் நிலைநாட்டுவதற்கு ஆங்கில மொழியை சிறந்ததோர் கருவியாகக் கொண்டார்களோ அதே போலத்தான் வடநாட்டவர்களும் தென்னாட்டில் தங்கள் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட ஹிந்தி மொழியை அருமையானதோர் கருவியாகக் கொண்டுவிட்டார்கள். ஹிந்தி, தென்னாட்டிலே வேரூன்றி விடுமானால், பிறகு தென்னாடு விடுதலை பெறுவது என்பதோ, வடநாட்டுச் சுரண்டலிலிருந்து மீள்வது என்பதோ தனிச் சுதந்தரக் குடியரசு தோன்றுவது என்பதோ தேய்ந்த கனவாக முடியுமே தவிர நடைமுறைக் கீதமாக ஆக முடியாது. தென்னாட்டில் வடநாட்டு இந்தி மொழி நுழைந்து விட்டால், நுழைந்து தன்னை நிலைநாட்டிக் கொண்டுவிட்டால், பிறகு, வடநாட்டு கலாசாரமும் தென்னாட்டில் இடம் பெற்றுவிடும். மொழி, கலாசாரத்தின்சுருக்கம்! எனவே வடவர் மொழி புகுந்தால் வடவர் கலாசாரமும் புகுவது உறுதி. வடவர் கலாசாரம் தென்னாட்டின்மீது படையெடுத்து வெற்றி கொண்டுவிட்டால் வடவர் ஆதிக்கம் தென்னாட்டில் என்றென்றும் நிலைத்துத் தங்கிவிடும் என்பதை எவரும் மறுக்க முடியாது—எவரும் என்றால் ஓமந்தூரார் உட்பட எவரும்! எனவேதான் நாம் இந்தி மொழி நுழைவை இவ்வளவு உரமாக எதிர்த்து நிற்கிறோமே தவிர வேறில்லை.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் டில்லியிலே இருந்த இந்தி மொழி ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துப் பேசிய போது இந்த எண்ணங்களைத்தான் தன் உள்ளத்திலே கொண்டிருந்திருப்பார்.

"நாட்டிலே இன்று தோன்றியிருக்கும் இந்தி மொழி ஏகாதிபத்திய வெறியை நான் பலமாகக் கண்டிக்க விரும்புகிறேன். இந்தியா முழுவதற்கும் இந்தி பொது மொழியாக வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால், இந்தியா முழுவதும் இந்தி பேசப்படுகின்றதா? ஐக்யமாகாணம், மத்திய மாகாணம், பீகார் போன்ற சில இடங்களில் இந்தி பேசப்படுவது மெய்தான். ஆனால் மற்ற இடங்களை நாம் கவனிக்க வேண்டாமா? இந்தியை இந்தியப் பொதுமொழியாக உடனே கொண்டு வந்துவிட வேண்டுமென்று துடியாய்த் துடிப்பவர்களுக்கு இந்தியா முழுவதும் ஹிந்தி மொழியைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதை நினைப்பூட்டுகிறேன்.

என்னைப் பொறுத்தவரை இந்தியைப் படித்தறிந்து கொண்டுவந்து இங்கு இந்தியில் தான் பேச வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்பட்டால் என்னால் அப்படிப் பேசமுடியாது.

தென்னாட்டு மக்களின் சார்பாக நான் ஒரு எச்சரிக்கை விடுக்க ஆசைப்படுகிறேன். தென்னாட்டில் பிரிவினை வேண்டுமென்று கூறுபவர்கள் ஏற்கனவே இருந்து வருகிறார்கள். இந்த இந்தி ஏகாதிபத்திய உணர்ச்சி அவர்கள் கரத்தை வலுப்படுத்தும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது"

—தோழர் கிருஷ்ணமாச்சாரியார் அரசியல் ஆக்க மன்றத்தில் இந்த வார்த்தைகளைக் கூறியபோது

(2-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாக இந்திஎதிர்ப்பு அறப்போர் தத்துவத்தை அவினாசியார் கூறியுள்ளார்! வாழ்க அவினாசியார்! வாழ்க அவர்தம் அஞ்சாமை!

கடைசியாக ஒரே ஒரு சிறு செய்தி: அமைச்சர் மற்றொரு நாட்டுக் கலாசாரம் என்று பேசியிருப்பது வடநாட்டுக் கலாசாரத்தைக் குறிப்பிட்டல்ல! மேல் நாட்டு கிறித்தவக் கலாசாரத்தைக் குறிப்பிட்டு!

இருக்கட்டும்! ஒரு நாட்டுக் கலாசாரப் படையெடுப்பை எதிர்த்து நிற்க வேண்டியதுதான் நியாயம் என்றால் மற்றொருநாட்டு கலாசாரப் படையெடுப்பையும் எதிர்த்து நிற்க வேண்டியதுதானே நியாயம்!

மேல் நாட்டுக் கிறித்தவக் கலாச்சாரம் நம் பள்ளிகளில் படையெடுப்பால் நமக்குத்தீமை விளையும் என்றால் வடநாட்டு ஆரிய கலாசாரம் நுழைவதால் மட்டும் நன்மையா விளையப் போகிறது?

தினை விதைத்தால் தினைதான் விளையும் என்றால் கேழ்வரகு விதைத்தால் மட்டும் சோளமா விளைந்துவிடும்?

ஆகவே, அமைச்சர் அவர்கள் கிறித்தவக் கலாசாரத்திற்குக் கூறியது வடநாட்டுக் கலாசாரத்திற்கு மட்டும் எப்படிப் பொருந்தாமல் போய்விடும்?

பொருந்தும்—நிச்சயமாகப் பொருந்தும்.

—

தொடர்கதை :

[முன்பு:—மலர்புரியில், கலைஞன், குமாரும் வைத்தியர் வையாபுரியின் மகள் குமுதமும் காதல் வெள்ளத்தில் மிதந்துகொண் டிருக்கிறார்கள், ஏழையப்பரின் ஏற்றத்திற்காக உழைக்க வேண்டுமென்று கோபால் என்னும் தன் தோழன் எழுதிய உணர்ச்சிமிக்க கடிதம், குமாரைப் புது மனிதனாக்குகிறது.

சோலையூரில் சுயமரியாதை வீரனான சிவன், ஆரியப்பெண் மனோரமாவின் கண் வீச்சில் சொக்கி அவளை மணக்கிறான். இதன் காரணமாக அப்பெண்ணின் தந்தை கோட்டீஸ்வரய்யரின் கோபத்திற்கு அவன் ஆளாகிவிடுகிறான். சமயம் கிடைத்தபோதெல்லாம் ஆரியப் பாம்பு தன் விஷப்பற்களால் அவனைத் தீண்டி, ஆவியைக் குடிக்கத் துடிக்கிறது!

பழத்தூரில் ஜமீன்தாரை எதிர்த்து உழவர்கள் நடத்தப் போகும் போராட்டத்தில் கோபாலுக்கு உதவியாக இருக்க குமார், தன் காதலியிடம் விடை பெற்றுக் கொண்டு அவ்வூர் செல்கிறான். உரிமைப் போராட்டம் நடைபெறுகிறது. ஜமீன்தார் கொலை செய்யப் படுகிறார்! குமாரும் கோபாலும் தான் கொலை செய்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வருகிறது. இதனால் போலீஸாருக்குப் பயந்து, குமாரும் கோபாலும் தலைமறைவாக, படகோட்டி வேடத்தில் நாட்களைக் கழிக்கிறார்கள்.

மனோரமா நோய் வாய்ப்பட்டு இறந்து விடுகிறாள். அவளின்மேல் கொண்டிருந்த பாசத்தால் மறுமணம் செய்துகொள்ள சிவன் மறுக்கிறான். சிவனைக் கணவனாக ஏற்றுக் கொள்ளும்படி விஷக் கிண்ணத்தைக் காட்டி குமுதத்தை வையாபுரி பயப்படுத்துகிறார். இருவருக்கும் விருப்பமின்றி சிவனும் குமுதமும் மணக்கிறார்கள், பெற்றோரின் பலவந்தத்தால்.

படகோட்டி வேடத்திலிருந்த குமாரைத் தெரிந்துகொண்டு ஜாடையாக குமுதத்திற்கு மணமான செய்தியை அவனிடம் தெரிவிக்கிறார், கோடீஸ்வரய்யர். குமார் துன்பக் கேணியில் ஆழ்கிறான். அய்யரின் உதவியினால் போலீஸார் அவர்கள் இருவரையும் சிறைப் படுத்துகிறார்கள்.

காசநோயினால் சிவனின் உடல் மெலிந்துகொண்டே வருகிறது. சிவனுக்கு வேண்டிய வேலைகளை உணர்ச்சியற்ற யந்திரம் போல் குமுதம் செய்து கொண்டிருக்கிறாள்.

சிவன், தான் இனி பிழைப்பது கடினம் என்று தெரிந்துகொண்டு, வருந்தி கண்ணீர் கசிகிறான். அறையினுள் குமுதம் வருவதைக் கண்ட அவன், கண்களைத் துடைத்துக் கொண்டு, அருகில் அவள் வந்ததும் தலைநிமிர்ந்து அவளைப் பார்க்கிறான். கண்கள் கலங்குகின்றன. "பாரதிதாசன் கவிதைகள்" என்ற நூலை எடுத்து, ஏடுகளைத் தள்ளிப் பார்க்கிறான்.

"குமுதம்! உடனே வீணையைக் கொண்டுவா!" என்கிறான் சிவன். குமுதம் சென்று வீணையைக் கொண்டு வருகிறாள்.

பிறகு.........!]

சிவன் புரட்சிக் கவிஞரின் நூலை அவளிடம் கொடுத்து, ஒரு பாடலைக் காட்டி, "குமுதம்! இந்தப் பாடலில் கோடிட்டிருக்கும் சில வரிகளைமட்டும் உணர்ச்சி கலந்த உரத்த குரலில் பாடு!" என்று கெஞ்சும் குரலில் கூறினான்.

குமுதம் அந்த வரிகளை மேலோடு பார்த்தாள். அவள் உள்ளத்தில் ஒரு திடீர் அதிர்ச்சி ஏற்பட்டது.

"ஏன் இதனைப் பாடும்படிக் கூறுகிறீர்? இது வேண்டாம்! கவிஞரின் வேறு கவிதைகளைப் பாடுகிறேன்!"

"வேறு கவிதைகள் வேண்டாம் எனக்கு! என் கடைசி வேண்டுகோள். மறுக்காதே! வீணையின் நாதத்தையும் உன் குரலின் இனிமையையும் ஒன்றாகக் குழைத்து இந்தப் பாடலுக்கு மெருகு கொடு! விரைவாக............"

வீணையை விரல்களால் மீட்டு, கவிதையைப் பாடத் தொடங்கினாள்.

"கடும் பிணி யாளன் நான்
இறந்த பின் மாதே!
கைம் பெண்ணாய் வருந்தாதே,
பழி என்றன் மீதே.
அடஞ்செய்யும் வைதீகர்
பொருட்படுத் தாதே!
ஆசைக் குரியவனை நாடு—மகிழ்
தார்சூடு—நலம்தேடு! [வேறு
கற்கண்டு போன்ற பெண் கணவனை
இழந்தால்
கசந்த பெண் ஆவது விந்தைதான
புவி மேல்!
சொற் கண்டு மலைக்காதே உன்
பகுத் தறிவால்
தோஷம், குணம் அறிந்து நடப்பாய்
—துயர்கடப்பாய் —துணைபிடிப்பாய்
—பயம் விடுப்பாய்!"

இப்பாடலை வேதனையோடு குமுதம் பாடி முடித்தாள். சிவனின் கண்களில் ஒளி வீசியது.

"குமுதம்! இந்தப் பாடலைப் பல முறை படித்திருக்கிறேன். மானா

(8-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)